ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2109 - 2019 පෙබරවාරි මස 01 වැනි සිකුරාදා - 2019.02.01
*2109 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 304 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 308 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 305 | ஏல விற்பனைகள் | 313 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019,பெப்புருவரி மாதம் 22ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

303 - B 81490 - 5403 (2019/02)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## மேல் நீதிமன்றம் - அக்கரைப்பற்று

பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் 2019

*அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட வாகனங்கள் பகிரங்க விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2019, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி அன்று பி.ப.3.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*விண்ணப்பங்கள் யாவும் மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம் , கல்முனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது கல்முனை மேல் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டியினுள் இட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலைமனு" மற்றும் "விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் " ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.*

*கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலை மனுக்கோரும் இறுதித் திகதியில் பி.ப.3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கையினை முன்வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.*

*வாகனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக விலைமனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு(100/=) ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினை செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2019, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதியன்று மு.ப. 11.30 மணியுடன் நிறுத்தப்படும்.*

| *தொ.இல.* | *வாகனத்தின் விபரம்* | *வகை* | *விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம்* | *வைப்புக் கட்டணம்* | *வழக்கு இலக்கம்* |
|---|---|---|---|---|---|
| 1. | Dual Purpose | TATA ACE EP - PQ-3457 | MCA/01/2018 | 7,500.00 | 46344/MIS |
| 2. | Dual Purpose | TATA ACE EP-PP-9734 | MCA/02/2018 | 7,500.00 | 46183/MIS |
| 3. | Dual Purpose | Mahindra Maxximo Plus UP PY-7035 | MCA/03/2018 | 7,500.00 | 45342/ MIS |
| 4. | Motor Cycle | BAJAJ CT 100 BEA- 7484 | MCA/04/2018 | 1,000.00 | 47474/ODD |
| 5. | Motor Cycle | HERO Dawn BCI- 9394 | MCA/05/2018 | 1,000.00 | 43249/ PE/ 15 |

*குறிப்பிட்ட 2019 ,பெப்புருவரி மாதம்21 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற சம்பாத்தியக் குழுவினால் திறக்கப்படும்.*

*விலைமனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அப்பொருளை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற சம்பாத்திய குழு பிறப்பிக்கும். இதனடிப்படையில் விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் மேற்கொள்ளும்.*

*விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் வாகனங்களை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் பி. ப.2.30 மணி வரைக்கும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.*

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்தி வைப்பதற்கு நீதிமன்றுக்கு பூரண அதிகாரம் உண்டு. மேலும் மேல் நீதிமன்ற பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதி முடிவாகவும் கொள்ளப்படும்.

விற்பனை செய்யப்படும் வாகனம்/ வாகனங்களை பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாக மட்டும் செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஸ்ரீநிதி நந்தசேகரன்,
மேல் நீதிமன்ற நீதிபதி,
கிழக்கு மாகாணம்.

மேல் நீதிமன்றம்,
கிழக்கு மாகாணம்,
கல்முனை,
2019, சனவரி 09.

2- 55

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

### மாவட்ட /நீதிவான் நீதிமன்றம், முல்லைத்தீவு
### மோட்டார் வாகனங்களின் பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல் - 2019

01. முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டும் , உரிமை கோரப்படாததுமான கீழக்காணும் மோட்டார் வாகனங்கள் 2019.02.16 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

02. குறிப்பிட்ட ஏதாவது வாகனங்கள் தொடர்பாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனைக்கு குறிப்பிட்ட தினத்தில் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. பதிவாளரின் அனுமதி பெற்று ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் ஏலவிற்பனைக்கென குறிப்பிட்ட வாகனங்களை பொதுமக்கள் பார்வையிடலாம்.

04. நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மன்றின் விருப்பு உரிமையின் பிரகாரம் அவ்வாகனங்களை ஏல விற்பனையிலிருந்து நீக்கி விடுவதற்கான உரித்தை மன்று கொண்டுள்ளது.

05. ஏல விற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட வாகனங்களை உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். மேலும் எல்லா கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய ஆளடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

செ. லெனின் குமார் ,
மாவட்ட நீதிபதியும் நீதிவானும்,
மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் ,
முல்லைத்தீவு.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.

பகிரங்க ஏல விற்பனை- 2019.02.16

பதிவு செய்யக்கூடிய மோட்டார் வாகனங்களின் விபரங்கள்

| Serial No. | Vehicle No. | Vehicle Class | Case No. |
|---|---|---|---|
| 1 | NP PW - 5912 | கப் வாகனம் | 7978 |
| 2 | NP BCG - 2653 | மோட்டார் சைக்கிள் | B/23/17 |
| 3 | NP BCD - 0966 | மோட்டார் சைக்கிள் | B/618/17 |
| 4 | NP DAA - 5966 | கப் வாகனம் | B/983/15 |

| *Serial No.* | *Vehicle No.* | *Vehicle Class* | *Case No.* |
|---|---|---|---|
| 5 | NP PT - 7700 | கப் வாகனம் | 7005 |
| 6 | NP PP - 0156 | கப் வாகனம் | 21233 |
| 7 | NP PS - 2472 | கப் வாகனம் | B/296/13 |
| 8 | WP AAE - 3495 | மோட்டார் முச்சக்கர வண்டி | 20704 |
| 9 | NP RA - 1153 | உழவு இயந்திரம் | 14087 |
| 10 | NP BCO - 8430 | மோட்டார் சைக்கிள் | 22633 |
| 11 | NP VT - 0688 | மோட்டார் சைக்கிள் | AR/56/18 |
| 12 | NP BAI - 0258 | மோட்டார் சைக்கிள் | AR/671/17 |
| 13 | NP RB - 7124 | உழவு இயந்திரம் | 21345 |

பகிரங்க ஏல விற்பனை– 2019.02.16

உதிரிப்பாகங்களுக்கான மோட்டார் வாகனங்களின் விபரங்கள். ( இரும்பு)

| *Serial No.* | *Vehicle No.* | *Vehicle Class* | *Case No.* |
|---|---|---|---|
| 1. | NP VM - 5753 | மோட்டார் சைக்கிள் | AR/253/17 |
| 2. | N/A | மோட்டார் சைக்கிள் | AR/615/17 |
| 3. | NP JG- 7602 | மோட்டார் சைக்கிள் | B/610/16 |
| 4. | 28 Sri 4560 | லொறி | 3306 |
| 5. | 41 Sri 1215 | லொறி | 25304 |
| 6. | NP QY - 4133 | மோட்டார் முச்சக்கர வண்டி | 9246 |
| 7. | NC VF - 2746 | மோட்டார் சைக்கிள் | 24278 |
| 8. | NP MO - 7532 | மோட்டார் சைக்கிள் | 19390 |
| 9. | N/A | மோட்டார் சைக்கிள் | 17336 |
| 10. | NC JH - 2627 | மோட்டார் சைக்கிள் | 19642 |
| 11. | NP ME - 6824 | மோட்டார் சைக்கிள் | 20051 |
| 12. | NP VJ - 1423 | மோட்டார் சைக்கிள் | 24626 |
| 13. | NP QY - 3473 | மோட்டார் முச்சக்கர வண்டி | 18314 |
| 14. | NP QY - 3977 | மோட்டார் முச்சக்கர வண்டி | 29169 |
| 15. | NP WL - 8163 | மோட்டார் சைக்கிள் | AR/918/17 |
| 16. | NP WP - 4877 | மோட்டார் சைக்கிள் | 16587 |
| 17. | NC ML - 0646 | மோட்டார் சைக்கிள் | AR/917/17 |
| 18. | NP PP - 9267 | கப் வாகனம் | 10257 |
| 19. | NP PR - 0053 | கப் வாகனம் | 9645 |
| 20. | NP HT - 5458 | மோட்டார் சைக்கிள் | AR/241/17 |
| 21. | N/A | உழவு இயந்திரப் பெட்டி | 14065 |
| 22. | N/A | உழவு இயந்திரப் பெட்டி | 15966 |
| 23. | N/A | உழவு இயந்திரப் பெட்டி | 20856 |
| 24. | N/A | உழவு இயந்திரப் பெட்டி | 11802 |
| 25. | N/A | உழவு இயந்திரப் பெட்டி | 21345 |
| 26. | 41 Sri 4269 | லொறி | 11639 |

## மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட உரிமை கோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை- 2019

01. மூதூர் மாவட்ட / நீதிவான் நீதிமன்றத்தினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளில் அரசுடமையாக்கப்பட்ட உரிமைகோரப்படாத பொருட்களின் ஏல விற்பனை 2019.03.16 ஆந் திகதியன்று காலை 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

02. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பதாகப் பார்வையிடலாம்.

03. பகிரங்க ஏலவிற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களிற்கு உரிய விலை கிடைக்கப் பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

எம்.எஸ். எம். சம்சுதீன் ,
மாவட்ட நீதிபதி/ நீதிவான்,
மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் ,
மூதூர்.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - மூதூர்
பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படவுள்ள பொருட்களின் விபரம்

| தொ.இ | வழக்கு இல. | பொருட்கள் | தொகை |
|---|---|---|---|
| 1. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 2. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 3. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 4. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 5. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 6. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 7. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 8. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 9. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 10. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 11. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 3 |
| 12. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 5 |
| 13. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் பானை | 4 |
| 14. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் தாச்சி | 7 |
| 15. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் தாச்சி | 3 |
| 16. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் தாச்சி | 3 |
| 17. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் தாச்சி | 3 |
| 18. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் தாச்சி | 3 |
| 19. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் தாச்சி | 3 |
| 20. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் தாச்சி | 3 |
| 21. | வழக்கு இல. இல்லை | அலுமினியம் தாச்சி | 2 |
| 22. | AR 155/14 | துவிச்சக்கர வண்டி (12530053) | 1 |
| 23. | AR 177/18 | துவிச்சக்கர வண்டி(69543185) | 1 |

| தொ.இ | வழக்கு இல. | பொருட்கள் | தொகை |
|---|---|---|---|
| 24. | AR 180/18 | துவிச்சக்கர வண்டி (V075065) | 1 |
| 25. | AR 342/17 | I - துவிச்சக்கர வண்டி (H08B5720) | 1 |
| | | II - துவிச்சக்கர வண்டி (OOE7241) | 1 |
| 26. | MC 36638/17 | துவிச்சக்கர வண்டி (AF60430) | 1 |
| 27. | MC 36640/17 | துவிச்சக்கர வண்டி (69968354) | 1 |
| 28. | AR 520/17 | I - துவிச்சக்கர வண்டி | 1 |
| | | II - துவிச்சக்கர வண்டி | 1 |
| 29. | வழக்கு இல. இல்லை | பரல் | 63 |
| 30. | வழக்கு இல. இல்லை | பிளாஸ்டிக் கேன் | 200 |
| 31. | MC 34329/16 | மோட்டார் சைக்கிள் - BDC - 5228 | 1 |
| 32. | MC 34329/16 | மோட்டார் சைக்கிள் - TB - 0323 | 1 |
| 33. | MC 34329/16 | மோட்டார் சைக்கிள் - MJ - 2909 | 1 |
| 34. | AR 22706/12 | மோட்டார் சைக்கிள் - WU - 1797 | 1 |
| 35. | AR226/15 | மோட்டார் சைக்கிள் - MC- 2756( For Scrap) | 1 |
| 36. | AR 576/ 12 | மோட்டார் சைக்கிள் - TV- 6799( For Scrap) | 1 |
| 37. | AR 170/2005 | மோட்டார் சைக்கிள் - 80-2043 | 1 |
| 38. | MC 39723/18 | மோட்டார் சைக்கிள் - BEP- 7318 | 1 |
| 39. | AR 182/18 | மோட்டார் சைக்கிள் - VT- 5316 | 1 |

2- 180

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஷோன்ங்லி ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட்

கம்பனி இல. : பீவீ 00205256

பதிவு முகவரி: இல. 47, அலெக்ஸாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 7

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.10.13

கம்பனிச் செயலாளர்கள்,
கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிரைவெட்) லிமிட்டெட்.

2-09

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம், பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டட் தனது பெயரை பீப்பள்ஸ் மைக்ரோ - கொமர்ஸ் லிமிட்டட் என சட்டப் பிரிவு 8 இன் கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளது தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் தருகின்றோம்.-

கம்பனியின் முன்னைய பெயர் : பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டட்

பதிவு செய்யப்பட்ட இல. : பீபி 3868

பதிவு செய்யப்பட்ட அலுவல முகவரி: இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 8

கம்பனியின் புதிய பெயர் : பீப்பள்ஸ் மைக்ரோ -கொமர்ஸ் லிமிட்டட்

சபையின் கட்டளைப்படி,

எல். டீ. கோட்டேகொட,
கம்பனிச் செயலாளர்,
பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டட்.

கொழும்பு,
2019, சனவரி 08.

2-10

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்படும் அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : கொரொனா டிரேடிங் (பீவீடீ) எல்ரீடி

*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இல. 142, உடுவராகொட, கஹவ
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018, செத்தெம்பர் 22
*பதிவு இலக்கம் :* பீவீ 00204539

செயலாளர்.

2-14

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ்க் குறிப்பிட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்:-

*கம்பனியின் பெயர் :* ஆர் அன்ட் டீ வெஹிகல் வலுவேசன் சென்டர் (பிரைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 00201983
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.07.14
*பதிவு முகவரி :* இல.88/2ஏ, சுனேத்ராதேவி வீதி, கொஹுவளை

2-24

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் வீடுக்கப்படும் அறிவித்தல்:-

கீழே காணப்படும் கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் 2018, திசெம்பர் 26 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* கௌரி கெயா கிளீனிங் (பிரைவேட்) லிமிடெட்

*கம்பனியின் இலக்கம் :* பீவீ 00207474
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 176, மாளிகாகந்த வீதி, கொழும்பு 10

கௌரி கெயா கிளீனிங் (பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்.

2-42

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* டிரெவல்ஸென் சவுத் ஏஷியா (பிறைவட்) லிமிடட்
*பதிவிலக்கம் :* பீவீ 00207012
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.12.09
*பதிவு முகவரி :* இல. 308-310, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, கொழும்பு 03, இலங்கை

சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட்,
டி ரெவல் ஸென் சவுத் ஏஷியா (பிரைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

2-61

---

## பீசி ஹவுஸ் பிஎல்சி

## கம்பனி பதிவு இல. - PV 1827 PB- PQ

## கம்பனி கலைப்பாளர்கள் ராஜினாமா அறிவித்தல்

*கம்பனியின் பெயர் :* பீசி ஹவுஸ் பிஎல்சி
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 451, காலிவீதி, கொழும்பு 3
*நீதிமன்றம் :* வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல. :* HC ( CIVIL) 47/2013/CO
*கம்பனி கலைப்பாளர்கள் பெயர் :* பிஞ்சாபதுகே எக்சிறி அருண ஜயவிக்ரம மற்றும் ஜெராட் ஜீவாநன்தன் டேவிட்
*முகவரி :* லெவல் 3, இல. 11, காசல் லேன், கொழும்பு 4

*கலைப்பாளர் ராஜினாமா திகதி :* 2019.01.04

1-67

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* எ மினிட் பை டுக்டுக் (பிறைவட் ) லிமிடட்
*பதிவிலக்கம் :* பீவீ 00207415
*பதிவு முகவரி:* லெவல் 21, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 1

2-69

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : எக்ஸ்கெப்பேட் லெஷர் (பிறைவட்) லிமிடட்

பதிவிலக்கம் : பீவீ 00207710

பதிவு முகவரி: லெவல் 21, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 1

2-70

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : கிரீன்மொ (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 00207641
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.01.02
பதிவு முகவரி : அசோகாராம வீதி, தொடம்பஹல, திக்வெல்ல

கம்பனிச் செயலாளர்கள்.

2-71

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : யுனிக் புட் ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிடட்

பதிவிலக்கம் : பீ வீ 00207525

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.12.28

பதிவு முகவரி: இலக்கம் 178/5, கொழும்பு வீதி, கெஹெல்வல, கிரிபத்கும்புர

கம்பனிச் செயலாளர்கள்.

2 - 72

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : அஜந்தா ஹார்ட்வெயார்ஸ் ( பிறைவட்) லிமிடட்

பதிவிலக்கம் : பீ வீ 17201

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2009. 12.10

பதிவு முகவரி: இல. 420, பழைய சோனகத் தெரு, கொழும்பு 14

பணிப்பாளர்.

2- 74

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்:-

கம்பனியின் பெயர் : விஜினி ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00204676
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.09.26
பதிவு முகவரி : இலக்கம் 29/97ஏ, ஸ்ரீ சரணங்கர வீதி, களுபோவில, தெஹிவளை

திரு. கே.ஜீ.ஏ.எஸ். சில்வா,
பணிப்பாளர்.

2-109

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : டீஸ்பயர் சிலோன் (பீவீடி) எல்டீடி
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.12.10
பதிவிலக்கம் : பீவீ 00207078
பதிவு முகவரி : இல.47, பரத்தா சாலை, கெசெல்வத்த, பாணந்துறை

கம்பனிச் செயலாளர்.

2-127

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் முன்னைய பெயர் : பிரதாப் சார்ட்டட் வெலுவேசன் சர்வேயர்ஸ் (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 91082
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2013.02.15
பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள திகதி : 2013.10.10
கம்பனியின் புதிய பெயர் : பிரதாப் சார்ட்டட் வெலுவேசன் அன்ட் கன்சல்டன்ஸி ( பிறைவட்) லிமிடட்
பதிவு முகவரி : 6சி, கிளியர் பொயின்ட் றெசிடென்சீஸ், பெரேரா மாவத்தை, கொடுவேகொட, ராஜகிரிய

கம்பனிச் செயலாளர்.

2-135

## அறிவித்தல்

### தொலேகந்த பவர் (பிவிடி) எல்டிடி ( பதிவிலக்கம் பீவீ 70023) எனும் கம்பனியை கட்டாயமாக மூடுவற்காக கடனளித்தவர்களால் கூட்டப்படும் கூட்டம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ( பிரிவாக்கம் 334(2) இன் படி மேற்குறிப்பிட்ட கம்பனியின் கடனளித்தவர்களால் இக் கம்பனியை மூடுவதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கொழும்பு 8, டட்லி சேனாநாயக்க மாவத்தை, இலக்கம் 19 பணிமனையில் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக நடைபெறுமென இத்தால் அறியத்தருகின்றோம்:-

1. இக் கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான மீளாய்வு அறிக்கை

2. இக் கம்பனிக்கு முதலீட்டு கடனளித்தவர்களால் மேற்படி கம்பனியை மூடுதல்- பரிசீலனை செய்தல் சம்பந்தமாக அனுமதி பெறுதல்

3. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் பிரிவாக்கம் 335 இன் படி கம்பனியை மூடுவதற்காக பாரமெடுப்பவர் ஒருவரை நியமித்தல்.

தொலேகந்த பவர் ( பிவிடி ) எல்டிடி கம்பனியின் சபை அறிவுறுத்தலின்படி,

எல் ஓ எல் சி கோர்ப்பரேட் சேர்விசஸ்
( பிறைவட் ) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2019, சனவரி 18.

2-159

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வேபட, வேபட வடக்கு, விஜேரத்ன பிளேஸ், இல. 570 என்ற முகவரியில் வசிக்கும் லாலனீ மீமெடும அல்லது விஜேரத்ன (தே.அ.அ.இல. 195161110050 ) ஆகிய நான், கல்கிஸ்ஸை, ஹோட்டல் வீதி, மவுண்ட் ஒழுங்கை, இல. 1ஏ 1/1, என்றமுகவரியில் வசிக்கும் மண்டால வல்லிகே பாலித ரவீந்ர தர்மசேன (தே.அ.அ.இல. 612550158V) என்பவருக்கு வழங்கப்பட்டதும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திருமதி ரேணுகா மானெல் எதிரிசிங்ஹ என்பவரினால் 2016.02.01 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2678 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக் கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியில்லை எனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

லாலனீ மீமெடும அல்லது விஜேரத்ன.

2-01

---

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இலங்கை, தெஹிவளை, த அல்விஸ் பிளேஸ், 27 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த முஹமட் ஹஷீம் அஸ்முல் பௌஷியா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ரணேபுர தேவகே பந்துல என்பவரினால் 590 என்ற இலக்கமுடையதும் 2014, திசெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் எனது அற்றோணித்தத்துவக்காரராக எனது சார்பாக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட தெஹிவளை, த அல்விஸ் பிளேஸ், 29/2 என்ற இலக்கத்தைச் சேர்ந்தவரும் நாணயக்கார குடாச்சி நந்திக்க யசந்த என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் ஒழிக்கப்பட்டுள்ளதெனவும் மேற்கூறப்பட்ட அற்றோணித்தத்துவத்தினால் எனது சார்பாக மேற்கூறப்பட்ட நாணயக்கார குடாச்சி நந்திக்க யசந்த என்பவரினால் எந்தவொரு நடவடிக்கை, செயற்பாடு அல்லது கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளப்படுவதற்கு நான் பொறுப்பாளி ஆக மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்க விரும்புகின்றேன்.

எம். எச். ஏ. பௌஷியா,
மேற்கூறப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் உரித்தாளர்.

2018, திசெம்பர் 31.

2- 02

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறைப்படி கூட்டிணைக்கப்பட்டு ( பதிவு இலக்கம் N ( PVS) 6643) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இல. 57A, பொஞ்ஜீன் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13 என்னும் முகவரியில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள குட்வில் மரீன் அக்கடமி ( பிறைவேட் ) லிமிட்டட் ஆகிய நாம், லாஃபெவரிட்டா மாவத்தை, முடுப்பட்டுவ, மாரவில என்னும் முகவரியைச் சேர்ந்தவரும் 620472255V ஆம் இலக்க தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவருமான விஜேசிங்க ஆராச்சிகே சந்திரரத்ன ஹேமகுமார என்பவரை எமது சட்டபூர்வஅற்றோணித்தத்துவகாரராக நியமிக்கும் வகையில் 2008, ஒற்றோபர் 11 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பீ. சரம் உடுல் பெர்னாண்டோ முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டு 2008.10.30 ஆந் திகதிக்குரிய இல. 4036 ஆம் தின ஏட்டின் 7/109 ஆம் இலக்க அற்றோணித்தத்துவப் பதிவேட்டுத் தொகுதி மற்றும் கோப்பின் கீழ் கொழும்புப் பதிவாளர் நாயக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அற்றோணித்தத்துவ அதிகாரம் இப்போதும் இனிமேலும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை மேற்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

குட்வில் மரீன் அக்கடமி ( பிறைவேட் ) லிமிட்டட்,
அற்றோணித்தத்துவ வழங்குனர்.

2- 13/1

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறைப்படி கூட்டிணைக்கப்பட்டு (பதிவு இலக்கம் PV 12142) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இல. 278- 1/2, ஆர். ஏ.டீ.மெல் மாவத்தை, கொழும்பு 3 என்னும் முகவரியில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள குட்வில் (பிறைவேட்) லிமிட்டட் ஆகிய நாம், லாஃபெவரிட்டா மாவத்தை, முடுப்பட்டுவ, மாரவில என்னும் முகவரியைச் சேர்ந்தவரும் 620472255V ஆம் இலக்க தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவருமான விஜேசிங்க ஆராச்சிகே சந்திரரத்ன ஹேமகுமார என்பவரை எமது சட்டபூர்வ அற்றோணித் தத்துவகாரராக நியமிக்கும் வகையில் 2007, பெப்புருவரி 01 ஆந் திகதி ஐக்கிய இராச்சியத்திலுள்ள கோட்னி ஸ்மித் அன்ட் கம்பனி சொலிசிஸ்டர்ஸ், 2 விலேஜ் வே ஈஸ்ட், ரேனர்ஸ் லேன் மிடில்செக்ஸ் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டு 2007.03.01 ஆந் திகதிக்குரிய இல. 2433 ஆம் தின ஏட்டின் 352/133 ஆம் இலக்க அற்றோணித்தத்துவப் பதிவேட்டுத் தொகுதி மற்றும் கோப்பின் கீழ் கொழும்பு பதிவாளர் நாயக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு அற்றோணித்தத்துவ அதிகாரம் இப்போதும் இனிமேலும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை மேற்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

குட்வில் (பிறைவேட்) லிமிட்டட்,
அற்றோணித்தத்துவ வழங்குனர்.

2- 13/2

---

## 2000.05.19 ஆந் திகதிய அற்றோணி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை, கோட்டை, வலவ்வத்தை, "ஸசிநு" இலக்கம் 93 என்ற முகவரியில் வசிக்கும் சமன் ஹிரந்த விஜேதுங்க ஆகிய என்னால் மாத்தறை, பிரசித்த நொத்தாரிசு எச். பீ. என். தயாரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்திய 2000.05.19 ஆந் திகதிய இலக்கம் 2427 என்ற அற்றோணி அதிகாரப் பத்திரத்தை மாத்தறை, கோட்டை, வலவ்வத்தை, "ஸசிநு" இலக்கம் 93 எனும் முகவரியில் குடியிருக்கும் மில்டன் விஜேதுங்க என்பவருக்கு வழங்கிய அற்றோணி அதிகாரத்தை இதிலிருந்து இரத்துச் செய்வதுடன் அவர் எனக்காக அடுத்து மேற்கொள்ளும் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் நான் பொறுப்பு சொல்ல மாட்டேன் என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மக்கள் சமூகத்திற்கும், இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஸமன் ஹிரன்த விஜேதுங்க.
(661930047V).

2- 19

---

## 1997.10.09 ஆந் திகதிய அற்றோணி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை, கோட்டை, வலவ்வத்தை, இலக்கம் 93 என்ற முகவரியில் வசிக்கும் சமன் ஹிரந்த விஜேதுங்க ஆகிய என்னால் மாத்தறை, பிரசித்த நொத்தாரிசு பனங்கலகே ஆரியசேன என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்திய 1997.10.09 ஆந் திகதிய இலக்கம் 123 என்ற அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் மாத்தறை, கோட்டை, வலவ்வத்தை, இலக்கம் 93 எனும் முகவரியில் வசிக்கும் மில்டன் விஜேதுங்க என்பவருக்கு வழங்கிய அற்றோணி அதிகாரத்தை இதிலிருந்து இரத்துச் செய்வதுடன் அவர் எனக்காக அடுத்து மேற்கொள்ளும் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் நான் பொறுப்பு சொல்ல மாட்டேன் என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும், இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

ஸமன் ஹிரன்த விஜேதுங்க.
(661930047V).

2- 20

---

## அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

பத்தரமுல்லை, பலவத்தை, D.P. விஜயசிங்க மாவத்தை, இல. 704 D/2 இல் வசிக்கும் பட்டுவங்கல காரியகரனகே ஷாந்த மற்றும் பத்திராஜ முதியன்சலாகே வாகீஷா ஹேரத் ஆகிய நாங்கள் பிரசித்த நொத்தாரிசு L.A. துஷாரி பலிஹவதன அவர்களினால் 2012.01.31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 276 ஐ உடைய ப்ரியன்கரகே ஜீவக பிரசன்ன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறோம். மேலும் மேற்குறிப்பிட்ட ப்ரியன்கரகே ஜீவக பிரசன்ன அவர்களால் இதன் பின் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நாங்கள் பொறுப்புதாரி இல்லை என அறிவித்துக் கொள்கிறோம்.

பட்டுவங்கல காரியகரனகே ஷாந்த,
பத்திராஜ முதியன்சலாகே வாகீஷா ஹேரத்.

2- 34

---

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இல. 125/1, மல்வத்துகொட, கவுடுள்ள, கலகெதரவைச் சேர்ந்த ரத்நாயக்க முடியான்சிலாகே இன்ராணி விஜேன்ர மெனிகே (தேசிய அடையாள அட்டை இல. 586350838V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு M.R.K. பண்டாரவினால் 2016.02.29 ஆந் திகதிய 169 ஆம் இலக்க முகதாவில் அத்தாட்சிப்படுத்தி மல்வத்துகொட, கலகெதரவைச் சேர்ந்த விஜயசிங்க முடியான்சிலாகே அநுர பண்டார விஜயசிங்க (தேசிய அடையாள அட்டை இல. 592941210V) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித்தத்துவத்தை இத்தினத்திலிருந்து (2019.01 18 ) இல்லாதொழித்தும் இரத்துச் செய்தும் வறிதாக்கியும் விடுகின்றேன் என இத்தால் பொது மக்களுக்கு மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

ரத்நாயக்க முடியான்சிலாகே
இன்ராணி விஜேன்ர மெனிகே.

2- 128

### அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

மட்டக்களப்பு, முகந்திரம் வீதி, இல. 19/3 ஐச் சேர்ந்தவரும் தற்போது அவுஸ்திரேலியா வுலிபொய்க்ட் இல. OLD 4019 இல. 23, ஒக்ஸ்லி அவீன்யு ஐச் சேர்ந்த திருமதி சுபத்ராதேவி தினேஸ் அன்ஸ்ராஜ் ஆகிய நான், மட்டக்களப்பு முகந்திரம் வீதி, இல. 19/3 ஐச் சேர்ந்த எனது தாயார் சாந்தஜீவா சௌந்தரி முருகப்பன் (தே.அ.அ.இல. 347751596V ) க்கு அவுஸ்திரேலியா பிரசித்த நொத்தாரிசு ஜிமா கில் டானி முகதாவில் 2013.1.30 முடிந்த அற்றோணித்தத்துவப் பத்திரம் கொழும்பு ரெஜிஸ்ட்ரார் ஜனரல் அலுவலகத்தில் 2013.03.19 ஆந் திகதியன்று இல. 161 ஆம் தினப்புத்தகத்தில் 74/21 ஆம் பதிவில் பதிவுபண்ணப்பட்ட அற்றோணித்தத்துவப்பத்திரத்தை இன்று முதல் சட்டபூர்வமாக இல்லாதொழித்து இரத்துச் செய்கின்றேன்.

மேற்கண்ட எனது தயார் சாந்தஜீவா சௌந்தரி முருகப்பன் மேல்கண்ட அற்றோணித்தத்துவப்பத்திரத்தின் மூலம் செய்யப்படும் எந்த உறுதியும் செல்லுபடியாகாது என்று இத்தால் இலங்கை வாழ் சகலருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2- 155

---

### அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

கடவத்தை, இஹல கரகஹமுன, கிம்போனியாத்தோட்டம், இலக்கம் 10/2/ஈ/1 எனும் இடத்தில் வசிக்கும் ( தேசிய அ.அ.இல. 194984710087) ஐ உடைய பலகடிய ஸீதா பத்மினி களமுல்ல வடுகே எனும் ஸீதா பத்தினி பலகடிய ( திருமணத்திற்கு பின் களமுள்ள ) ஆகிய என்னால் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திரு. சிரிநந்த குணவர்த்தன என்பவரால் 2017.03.19 ஆம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட 955 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித்தத்துவம் மூலம் பன்னிப்பிட்டிய, ஹோகந்தர வீதி, இலக்கம் 1466/1 எனும் இடத்தில் வசிக்கும் ( தேசிய அ.அ.இல. 543412090V) ஐ உடைய ஹெட்டி ஆரச்சிகே விஜேரத்ன பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் அற்றோணிப்பத்திரத்தில் குறிப்பிட்ட நபர் இத்திகதியின் பின்னர் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அல்லது கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்புதாரியாக இருக்கப் போவதில்லை என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பலகடிய ஸீதா பத்மினி களமுல்ல வடுகே.

2- 168

---

### அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இத்தால் அனைவருக்கும் அறிவித்துக் கொள்வதாவது, முஹன்திரம்கே சுனில் ரம்யசிறி கொஸ்வத்த ( 550630400X) இலக்க தேசிய அடையாள அட்டை உரித்தாளர் ) ஆகிய நான் அத்தபத்து முதியன்செலாகே கயான் பிரதீப் அத்தபத்துவை ( தே.அ.அ.இல. 840351823V) எனது சட்ட ரீதியான அற்றோணித் தத்துவதாரராக நியமித்த, தெல்கந்த, நுகேகொடை, பதிவாளர் நாயகத்தின் மேல் மாகாண உப அலுவலகத்தில் அற்றோணித்தத்துவப் பதிவேட்டில் 186/27 ஆம் பக்கம் மற்றும் அத்தியாயாம் கீழாக பதிவு செய்யப்பட்ட ஏ.வீ. அபேநாயக்க பிரசித்த நொத்தாரிசு மூலம் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2016.08.08 ஆந் திகதியிடப்பட்ட 1578 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப் பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் இது முதற்கொண்டு மேற்படி அற்றோணித்தத்துவத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் முடிவுக்கு வருவதாகவும் அறிவிக்கின்றேன்.

முஹன்திரம்கே சுனில் ரம்யசிறி கொஸ்வத்த.

2- 469

---

## ஏல விற்பனைகள்

### டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து, அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை நகர சபை எல்லைக்குட்பட்ட ஜயவர்தனபுர கிராம அலுவலர் B பிரிவில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் K.G.அமரதேவ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.02. 10 ஆந் திகதிய 15/2010 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் A எனும் காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 21.7 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

**மேற்கூறிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பாதைகளின் மேலாகவும், கீழாகவும் ஊடாகவும் உபயோகிக்கும் முழு உரிமையும் உண்டு.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** அம்பாறை நகர மத்தியிலிருந்து D.S.சேனாநாயக்க வீதியூடாக சுமார் 0.5 கி.மீ. தூரம் புத்தன்கல சந்தி வரை வந்து இடது பக்கமாக திரும்பி புத்தன்கல பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 1 1/4 கி.மீ. தூரம் ஜயவர்தனபுர வீட்டுத் திட்டம் வரை வந்தால் புத்தன்கல பாதையின் எல்லையில் இடது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**இவ்வாதனம் அம்பாறையைச் சேர்ந்த குருபுலே கமகே இந்துல கமகே என்பவர் கடப்பாடுடையவராக டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ சார்பாக பிரசித்த நொத்தாரிசு சஷிக N.S. த சில்வா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 785 ஆம் மற்றும் 813ஆம் இலக்க முறிகளின் மூலம் டீஎப்சீசீ வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

*2019, மாச்சு மாதம் 05 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2018.10.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.10.09 ஆந் திகதிய திவயின, த ஐலன்ட் மற்றும் 2018.10.11 ஆந் திகதிய தினக்குரல் பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-*

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*
*(2) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய வரி 1 % (நூற்றுக்கு ஒன்று);*
*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;*
*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000.00 ரூபா;*
*(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.*

*கொள்முதலில் மிகுதி 90% மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகாரசபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** *முகாமையாளர், சட்டப் பிரிவு டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ , இல.73, டபிள்யு.ஏ.டி இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி இல.: 011-2 371 371.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல பாதை,*
*மாவில்மடை,*
*கண்டி.*

*தொலைபேசி இல.: 081-2210595/071- 8446374/071-4962449*

*2- 120*

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**கண்டி மாவட்டம், கண்டி கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கண்டி நகர சபை எல்லைக்குட்பட்ட இல. 250 பிட்டகந்தகம கிராம அலுவலர் பிரிவில் பல்லே மஹய்யாவ கிராமத்தில் அமைந்துள்ள ''நுகதண்டாவே ஹேன'' எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் சுசிரி ஏக்கநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.06.23 ஆந் திகதிய 3523 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள் , மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 12 பேர்ச். பரப்பளவானது.**

**இவ்வாதனம் ஜெய்னுல் ஆப்டீன் புவாட் மரிக்கார் மற்றும் புவாட் மரிக்கார் மொஹமட் பெரோஸ் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.**-*கண்டி நகரத்திலிருந்து கட்டுகஸ்தோட்டை பாதையில் சுமார் 2.50 கி.மீ. தூரம் மஹய்யாவ வரை ( சென்ட்ரல் பினேன்ஸ் வாகன தரிப்பிடம் வரை) வந்து இடதுபக்கமாகத் திரும்பி சுமார் 60 கி.மீற்றர் தூரம் சென்றதும் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*2019.03.01 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2018.10.19ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.10.16 ஆந் திகதிய திவயின, த ஐலன்ட் மற்றும் தினக்குரல் பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-*

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*
*(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);*
*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;*
*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000 ரூபா;*

*கொள்முதலில் மிகுதி 90% உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ , இல. 172, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை.
தொலைபேசி: 081- 2497910, 081- 2499836, 081- 2498341.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைநகல் இல.: 081-2210595/071- 8446374/071-4962449

2- 121

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - ஏறாவூர் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் கிராமத்தில் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஏறாவூர் பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மீராகேனி கிராம அலுவலர் பிரிவு மீராகேனி கிராமத்தில் மீராகேனிபாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.M. நஜுவுடீன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.02.11 ஆந் திகதிய AMN/17/EP/ 7499 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 01 றூட் 30.85 பேர்ச் பரப்பளவான காணியும் அங்கு பொருத்தப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சகல நிலையான இயந்திரங்களும் மற்றும் பொருத்தப்பட்டிருக்கும் உபகரணங்களும் இயந்திரங்களும் உட்பட கீழ் விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

| விபரங்கள் | தயாரிப்பு மற்றும் மாதிரி | தோற்ற நாடு |
|---|---|---|
| புதிய ரைஸ் கலரிங் சோட்டிங் இயந்திரம் (01 தொகுதி) | 6ஆர் ஹய் ஸ்பீட் ரியல் ரைம் இண்டிகேஷன் சிஸ்ரம் 65 X M378 | சீனா |
| தாங்கி | - | - |
| எலிவேட்டர் 2’ × 1/2 ×26(06) | | - |
| கலர் சோட் கெபின் (01) | - | |
| மோட்டர் 3 எச்பீ (06) | - | - |
| 1200C வெயிட்பிரிட்ஜ் பிளற்போம் (01 தொகுதி) | | ஐக்கிய இராச்சியம் |

**இவ்வாதனம் ஒரய்ஷா ரைஸ் எக்ஸ்போட்டர்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.**- ஏறாவூர் நகரத்தில் மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து புன்னக் குடா பாதையில் சுமார் 800 மீற்றர் தூரம் சென்று வலது பக்கமாக திரும்பி மீராகேணி பாதைக்குப் பிரவேசித்து இப்பாதையில் சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் இடது பக்கமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

2019.02.25ஆந் திகதி பி.ப. 4.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2018.11.16 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.11.28ஆந் திகதிய “லக்பிம”, “டேலிமிரர்” மற்றும் “தினக்குரல்” பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில்
2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000 ரூபா;

கொள்முதலில் மிகுதி 90% மற்றும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீ . எல். சீ., இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. " உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.: 011-2661835, 011- 2661836, 011-2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2310595, 071- 8446374, 071- 4962449

2-122

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - ஏறாவூர் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் கிராமத்தில் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் , ஏறாவூர் பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மீராகேனி கிராம அலுவலர் பிரிவு, மீராகேனி கிராமத்தில் மீராகேனி பாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.M. நஜுவுடீன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.02.11 ஆந் திகதிய AMN/17/EP/7500ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 03 றூட் 20.60 பேர்ச் பரப்பளவான காணியும் அங்கு பொருத்தப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சகல இயந்திரங்களும் மற்றும் பொருத்தப்பட்டிருக்கும் நிலையான உபகரணங்களும் இயந்திரங்களும் உட்பட கீழ் விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் :**

| அலகு | விபரம் | தயாரிப்பு மற்றும் மாதிரி | தோற்ற நாடு |
|---|---|---|---|
| 01 | நான்கு தொன் திறன் ஸ்ரீம் பொயிலர் | ஷெல்மக்ஸ் - தேமெக்ஸ்லிமிட்டட் தொடர் இலக்கம்1பி-300-2 | இந்தியா |
| 01 | பெடி ட்ரையர் - 26000 கிலோ கிராம் | | இந்தியா |
| 01 | பேணருடன் 3.0 எச்பீ | | இந்தியா |
| 01 | பிரெஷர் பம்முடன் 5.0 எச்பீ மோட்டர் | | இலங்கை |
| 02 | பெடி கூலர் 2×2,20,000 | | இலங்கை |
| 01 | பெடி பொயிலர் எலிவேட்டர் - 132 அடி | | இலங்கை |
| 03 | டஸ்ட் சிலோஸ் 10 அடி உயரம் 3×3,30,000 | | இலங்கை |
| 02 | பெடி கிளீனருடனான மோட்டர்ஸ் 7.5 எச்பீ | | சீனா |
| 01 | பெடி சாண்ட் செப்பரேட்டர்ஸ் உடனான 3.0 எச்பீ | | இந்தியா |
| 01 | ரைஸ் ட்ரையர்ஸ் 5.0 எச்பீ மோட்டேர்ஸ் | | இலங்கை |

| அலகு | விபரம் | தயாரிப்பு மற்றும் மாதிரி | தோற்ற நாடு |
|---|---|---|---|
| 01 | ரைஸ் கூலர் உடனான 3.5எச்பீ மோட்டேர்ஸ் | | சீனா |
| 01 | ரைஸ் எலிவேட்டர்ஸ் – 496 அடி | | இலங்கை |
| 02 | பெனல் போர்ட்ஸ் 7×7,50,000 | | சீனா |
| 01 அலகு | சீசீடீ ரைஸ் கூலர் சோட்டேர்ஸ் 4ஆர் இயந்திரத்துடனான எல்லா கருவிகள் | HefeiTaihe Optoelectromic 65×252 | சீனா |
| 01 | பெடி சோட்டேர்ஸ் | DXCIN TQS×120 | சீனா |
| 01 | செப்பரேட்டேர்ஸ் | DXCIN MGCZ 100 ×10 | சீனா |
| 01 | ரைஸ் கிரேடேர்ஸ் | DXCIN MMJP 80×3 | சீனா |
| 01 | பெடி கிளீனர் | DXCIN TQLZ 100 ×2 | சீனா |
| 01 | பெடி ஸ்ரோனேர்ஸ் | DXCIN TQS× 100 | சீனா |
| 02 | ரைஸ் விற்றனர் | DXCIN | சீனா |
| 02 | ரைஸ் பொலிஷர் | DXCIN MPGH 19×1 | சீனா |
| 01 | பெடி ட்ரையர் மற்றும் திறன் 30,000 Kg | | |
| 01 | கஜு பொயிலிங் தாங்கி தொகுதி | | |

**இவ்வாதனம் ஒரய்ஷா ரைஸ் எக்ஸ்போட்டர்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.**– ஏறாவூர் நகரத்தில் மணிக்கூட்டு கோபுரசந்தியிலிருந்து புன்னை குடா பாதையில் சுமார் 800 மீற்றர் தூரம் சென்று வலது பக்கமாக திரும்பி மீராகேனி பாதைக்குப் பிரவேசித்து இப்பாதையில் சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் இடது பக்கமாக உள்ள 20 அடி அகலமான பாதைக்குப் பிரவேசித்து அப் பாதையில் சுமார் 75 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் வலது பக்கமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

2019.02.25ஆம் திகதி பி.ப. 3.45 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**– 2018.11.16 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.11.28ஆந் திகதிய "லக்பிம", "டேலிமிரர்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**– விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:–

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
